**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S.74/2016**

2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17ம் நாள் செவ்வாய்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3–ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

D.W.4 பாஸ்கரன், வயது 52, த/பெ துரைசாமி

நேரம் - 1.06

**குறுக்கு விசாரணை**

நான் என்ன ஆவணத்தில் சாட்சி கையொப்பம் இட்டேன் என்றால் கோவில் தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் சாட்சி கையெழுத்திட்டேன். எந்த ஆவணம் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அதை தவிர்த்து நான் வேறு ஏதாவது ஆவணத்தில் கையொப்பம் இட்டேனா என்றால் தான செட்டில்மெண்ட் மற்றும் திருத்தல் பத்திரத்தில் சாட்சி கையெழுத்திட்டேன். நான் அறக்கட்டளை நிர்வாகத்தில் இல்லை என்றால் சரிதான். அறக்கட்டளை எந்த வருடம் ஏற்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் அதைப் பற்றி தற்போது எனக்கு ஞாபகமில்லை. மேற்படி அறக்கட்டளையின் விதிகளை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்துள்ளேன். அதில் கண்டுள்ள விதிகள்படி 1 முறையாவது கூட்டம் நடத்த வேண்டும் என்றுள்ளது போல் மாதா மாதம் கூட்டம் நடத்தப்பட்டதா என்றால் இல்லை.

2. அறக்கட்டளை விதியின்படி தலைவர், செயலாளர், பொருளாளர் 2 வருடத்திற்கு ஒரு முறை மாற்ற வேண்டும் என்ற விதிமுறையை நாங்கள் பின்பற்றி வருகிறோமா என்றால் இல்லை, தற்போதுள்ள தலைவர், செயலாளர், பொருளாளர்தான் ஆரம்பத்திலிருந்தே இருந்து வருகிறார்கள். அதற்கு முன்பு வாதி பாஸ்கரன் அறக்கட்டளையை நிர்வாகம் செய்து வந்தார் என்றால் அதுப்போல் ஏதுமில்லை. மேற்படி விவரம் வாதி அறக்கட்டளையை நிர்வாகம் செய்து அதன் பின்னிட்டுதான் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் தற்போது நிர்வாகம் செய்து வருகிறார்கள் என்றாலும், மேற்படி விவரம் எனக்கு தெரிந்தும் நான் நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. ஆலயத்திற்கான மின் இணைப்பை வாதிதான் வாங்கினார் என்றாலும், தற்போது வரை அவர் பெயரில்தான் மின் கட்டணம் கட்டி வருகிறார் என்றால் சரியல்ல, கோயில் நிர்வாகம்தான் மின் கட்டணத்தை கட்டி வருகிறது. அதுப்போல் வாதியின் நிர்வாகத்தின் கீழ் இருக்கும் நபர் பழனி என்பவர் மின் இணைப்பு கோரி மனு தாக்கல் செய்து அதற்கான பாண்டு பத்திரத்தையும் பழனிதான் எழுதி கொடுத்தார் என்றால் சரியல்ல. இது சம்மந்தமாக வட்டாட்சியர் பழனிக்கு சான்று வழங்கியுள்ளார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. 2008ம் ஆண்டில் வாதியின் நிர்வாகத்தின் கீழ் இருந்த அறக்கட்டளையின்படிதான் மின் இணைப்பு பெறப்பட்டது என்றால் சரியல்ல.

4. கோயிலில் சீட்டு நடத்தி வந்து அதை வாதி தட்டி கேட்டதால் ஏற்பட்ட விரோதத்தால்தான் வாதியை நிர்வாகம் செய்ய விடாமல் தடுத்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. ஜெயராமன் நடத்தி வரும் சீட்டில் நானும் ஒரு உறுப்பினராக இருந்தேன் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் 15வது சீட்டு எடுத்து அதில் நான் கையொப்பமிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அதுப்போல் கோயிலில் சீட்டு நடத்தி விட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் வாதி சீட்டு நடத்தி வந்தார் என்ற சங்கதிகளை குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

5. மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் 26745/2015 என்ற வழக்கில் பெற்ற உத்தரவு பற்றி எனக்கு தெரியுமா என்றால் எனக்கு ஞாபகமில்லை. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் அதை நான் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன், ஆகையால் மேற்படி மனு எதற்காக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது பற்றி எனக்கு தெரியுமா என்றால் எனக்கு ஞாபகமில்லை. **என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ள சங்கதிகள் எனக்கு ஞாபகம் உள்ளதா என்றால் ஞாபகமில்லை, அதன் பின்னிட்டு வாதி வழக்கறிஞர் குறிப்பிட்டு பிரமாண வாக்குமூலத்தை நான் எப்போது தாக்கல் செய்தேன் என்று நினைவிருக்கிறதா என்று கேட்டதற்கு சாட்சி 2 முறை ஞாபகமில்லை என்று கூறுகிறார்.**

பிரதிவாதிகள் என்னை சாட்சியம் அளிக்க அழைத்ததன் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்தேன் என்றாலும், இவ்வழக்கில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றாலும், தற்போது நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் தெரியாது.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது.**

**நேரம் - 1.30**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/-D.V.Koperundevi
District Munsif,
Arni